**அ.வ.எண். 253/2023**
**வா.சா.1 : நல்லம்மாள்**
**தேதி : 08.01.2026**
**<u>சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,</u>**
**<u>1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

உங்கள் தகப்பனார் வேலுச்சாமிக்கு விவசாயம் தவிர வேறு வேலை இல்லை என்று சொன்னால் சரிதான். உங்கள் தகப்பனார் 2009 ஆம் ஆண்டு அவரது மகன் வழி பேரனான 3ம் பிரதிவாதி விஸ்வநாத்துக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் நகல் பிரமாண வாக்குமூலத்துடன் தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. 3 வருடத்திற்கு முன்பு தானசெட்டில்மெண்ட் எழுதிவைத்த விவரம் தெரியும். உங்கள் தகப்பனார் 2009 ஆம் ஆண்டு தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்த போதே உங்களுக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல. உங்களுக்கு 1983 ல் திருமணமானது என்று சொன்னால் சரிதான். உங்களுக்கு திருமணமானதிலிருந்து நீங்கள் உங்கள் கணவர் வீட்டில் தான் வசித்து வருகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் அனைவரும் அவர்களது திருணமத்திற்கு பிறகு அவர்களது கணவர் வீடுகளில் தான் வசித்து வருகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை பிரதிவாதிகளும் நீங்களும் அனுபவித்து வந்தீர்கள் என்று நிரூபிக்க வருவாய்த்துறை ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் வாதிகளாகிய நாங்களும் பிரதிவாதிகளும் ஒன்றாகத்தான் விவசாயம் செய்து வருகிறோம். என் தகப்பனாரின் தகப்பனார் சிலம்பண்ண கவுண்டர். அவர் உடன் பிறந்தவர்கள் மற்றும் இருவர் உள்ளனர். அவர்கள் கருப்பண்ண கவுண்டர், பழனியப்ப கவுண்டர்கள் ஆவார்கள். மேற்சொன்ன மூவரும் அவரவர்

பாகத்தை தனித்தனியாக பிரித்துக்கொண்டார்கள் என்று சொன்னால் சரிதான். உங்கள் தாத்தா சிலம்பண்ண கவுண்டருக்கு என் தந்தை மற்றும் வாங்கலாயி இருவர் தான் வாரிசுகள் என்று சொன்னால் சரிதான். வாங்கலாயியை நீங்கள் இந்த வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். பத்து பாகத்தில் 1 பாகம் முனியப்பனுக்கும், 4 பாகம் வாதிகள் நால்வருக்கும், வாங்கலாயிக்கு 5 பாகங்கள் தாவா சொத்தில் உள்ளது. வாங்கலாயி இறந்தவிட்டார். அவரின் வாரிசு தான் 2ம் பிரதிவாதி ஆவார். வாங்கலாயிக்கு 2ம் பிரதிவாதி ஒருவர் மட்டுமே வாரிசு. வாஙகலாயியின் கணவர் இறந்துவிட்டார். உங்கள் தகப்பனார் வேலுச்சாமிக்கு தாவா சொத்தில் ஒரு பாகம் அவர் உயிருடன் இருந்த காலத்தில் உள்ளது என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தில் வேலுசாமி உயிருடன் இருந்த காலத்தில் அவருக்கு இருந்த பங்கினை 3ம் பிரதிவாதிக்கு பதிவுசெய்யப்பட்ட தானசெட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார் என்று சொன்னால் என் தகப்பனாரை ஏமாற்றித்தான் கையொப்பம் பெற்றுள்ளனர். ஆவணம் போலியான ஆவணம் என்பதற்காக அதன்மீது எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். உங்கள் தகப்பனார் உடல்நிலை சரியில்லாதபோது முனியப்பன் தான் அவரை கவனித்து வந்தார்என்று சொன்னால் நானும் மற்ற வாதிகளும் கோயம்புத்தூரிலும், மதுரையிலும் வைத்து பார்த்துக்கொண்டோம். நீங்கள் வேலுச்சாமிக்கு மருத்துவ செலவு செய்ததற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். 1ம் பிரதிவாதி உங்கள் தகப்பனார் வேலுச்சாமியை அவர் இறுதிவரை பார்த்துக்கொண்டதால் தான் உங்கள் தகப்பனார் 3ம் பிரதிவாதிக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார் என்று சொன்னால் ஏமாற்றித்தான் எழுதிக்கொண்டார்கள். உங்கள் தகப்பனார்

ஏற்படுத்திக்கொண்ட கடனை 1ம் பிரதிவாதி அடைத்ததன் பேரில் தான் உங்கள் தகப்பனார் 3ம் பிரதவாதிக்கு தனக்குரிய பாகத்தினை தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்று சொன்னால் என் தகப்பனார் 10 கோடி வருமானம் வைத்திருந்தார் அவர் கடன் வாங்க அவசியமில்லை. நீங்கள் உங்கள் தகப்பனார் 10 கோடி ரூபாய் பணம் வைத்திருந்ததற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். நீங்கள் வழக்கில் தவறான தகவல்களை சொல்லியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. வழக்கில் கூறிய பங்கு விகிதாச்சாரம் தவறாக குறிப்பிட்டுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. முறையான நீதிமன்ற கட்டணம் செலுத்தாததால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN Digitally signed by ELAVAZHAGAN Date: 2026.01.08 17:57:55 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.